**கிழக்கு மாகாண சபை – 2024**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 11(1) ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2025 ஆகஸ்ட் 07 திகதி வழங்கப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 11(2) பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜூலை 28 திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை மற்றும் இலங்கை தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 10(1) பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிழக்கு மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருந்த ரூபா 56,378,484 இற்கான கட்டுநிதி மீளாய்வாண்டின் நிதி செயலாற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டியிருக்காததுடன், அந்த கட்டுநிதி மீதிகளை தீரத்தல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | கட்டுநிதிப் பெறுவனவுகளின் தேறிய பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுவதுடன், செயற்திட்ட நிதியம் மற்றும் ஏனைய பிரதான நிதியங்களுக்காக இவ்வாறான முறையில் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டுகின்றது. | திறைசேரியில் இருந்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் நிதிச் செயலாற்றுகை கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உரிய முறையில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 4,630,586 தொகைக்கான வாணிப தொழிற்பாடுகள் மூலம் கிடைத்த வருமானம் மற்றும் ஏனைய | மாகாண திறைச்சேரியுடன் கலந்துரையாடிய பின்னர் இந்த ஆண்டு முதல் இந்த வருமானம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | இரட்டிப்பு வழுக்கள் ஏற்படாதவாறு வாணிப முற்பணக் கணக்கிற்குரிய சேகரிக்கபட்ட வருமானம் நிதிச் செயலாற்றுகைக் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானங்கள் மீளாய்வாண்டின் போது நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சைக் கட்டணம் என அறவிடப்பட்டிருந்த ரூபா 5,306,550 தொகை நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் ரூபா 6,112,100 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டில் அந்தப் பெறுமதியில் ரூபா 805,550 இற்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒப்புதல் இன்றி பிரதேச செயலங்களினால், இந்த வருமானங்கள் நேரடியாக மாகாண திறைசேரிக்கு அனுப்பியிருந்தமையால் வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் 02 நியதிச் சட்ட அதிகாரசபைகளினால் ரூபா 5,187,792 தொகைக்கான திரண்ட பற்றாக்குறையொன்று நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திரண்ட உரிமை அந்தப் பெறுமதியால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | நியதிச்சட்ட முறையிலான நிறுவனங்களின் பற்றாக்குறை அதற்காக கட்டுநிதி வழங்கும் அமைச்சுக்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | மாகாணசபை நிதிக்கூற்றுக்களில் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் நியதிச்சட்ட முறை அதிகார சபைகளின் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது ஆளுனரின் நம்பிக்கை பொறுப்பு நிதியக் கணக்கில் ரூபா 9,315,118 தொகைக்கான உரிமைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காத காரணத்தினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மாகாண சபையின் மொத்த உரிமைப் பெறுமதி அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஆளுனர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதியம், மாகாண நிதியமல்லாத போதிலும், அந்த நியதிச் சட்ட நம்பிக்கை பொறுப்பு நிதியமாக காணப்படுவதனால் அந்த நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியில் மாகாண சபை நிதியக் கணக்கில் உட்படுத்த முடியாது. | மாகாண சபை நிதியத்தின் கணக்கினை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்ற ஆளுனர் நிதியம் நிறுவப்பட்டுள்ளமையால் அந்த நிதியம் மாகாண சபையின் மொத்த உரிமைக்கு சீராக்கல் செய்ய வேண்டும். |

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு – 900 கௌரவ ஆளுனரின் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 5.6 இற்கு முரணாக பதவியணியினரின் வீடுகளுக்காக பெறுமதி மதிப்பீட்டுத் தொகை அறவீடு செய்வதற்கு பதிலாக ஆளுனரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 1,000 தொகை வீதம் பெயரளவு வாடகையொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால், ஒரு மாதத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,922,400 இற்கான வாடகை வருமானத்திற்கு பதிலாக ரூபா 360,000 இற்கான மிகைவும் குறைந்த வாடகைத் தொகையொன்று மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பிரதான செயலாளரின் வேண்டுதல் கடிதத்தின் படி ஆளுனர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2018 – 2020, 2021 – 2023 காலப் பகுதிக்கான பெறுமான மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2019 ஆண்டின் அங்கீகாரத்தின் மீது ரூபா 1,000 அறவிடப்பட்டிருந்தது. 2024 – 2026 காலப் பகுதிக்குரிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி 2025 ஜூலை மாதம் முதல் புதிய பொருளாதார விகிதாசத்தின் படி அறவீடு செய்யப்பட்டது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 1.5.2 தலைப்பு – 901 மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2019 ஒக்தோபர் 10 திகதிய 03/2019 இலக்கம் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது இலங்கை நிருவாக சேவையின் விசேட தர 04 உத்தியோகத்தர்களுக்கு மற்றும் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி ஆளுனரின் அங்கீகாரத்துடன், மீண்டும் | இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் நிறுவுவதற்காக கிழக்கு மாகாண பிரதான செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டு ஆளுனரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அதற்காக தலையிட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவையில் சேர்க்கப்பட்டு பல்வேறு அமைச்சுக்களில் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் என நியமனம் செய்யப்பட்டு ஆளுக்குரிய சம்பளம் மற்றும் ஏனைய நிதியல்லாத நலன்கள் என ரூபா 1,923,401 தொகை செலுத்தப்பட்டிருந்து. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 107 வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றின் 94 சதவீதம் ஆதாவது 101 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அந்த பரீட்சைகள் நடாத்துவதற்கு விண்ணப்பங்கள் அழைப்பதற்கு முன்னர் ஒவ்வொரு பரீட்சைகளையும் நடாத்தப்படுகின்ற நாள் காலப் பகுதி தொடர்பாக மற்றும் உத்தியோகத்தர்களின் விபரங்கள் பிரதி பிரதான செயலாளர் (நிருவாகம்) அவர்களிடமிருந்து ஏற்கனவே விசாரணை மற்றும் கலந்துரையாடல் மேற்கொண்டு பரீட்சை நடைபெறும் நாள், காலப் பகுதி தொடர்பாக தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் அனேக பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது ஆட்சேரப்பு பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் பல நடைபெறுவதனால் வினைத்திறன் காண் பரீட்சை தொடர்பாக கவனம் செலுத்துதல் குறைவாக காணப்பட்டது. தற்போது ஆணைக்குழுவின் அறிவுரையின் படி வினைத்திறன் காண் தடைப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. | வினைத்திறன் காண் தடைப் பரீட்சை நடாத்துவதற்கு முறையான திட்டமொன்றின் படி மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 தலைப்பு – 921 பிரதிப் பிரதான செயலாளர் அலுவலகம் - நிதி

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 73 சதவீதமாகிய ரூபா 3,080,590,555 இற்கான பலவின வருமான வகை CIGAS பயன்படுத்தப்பட்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக கையினால் (Manual) கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக உண்மையான வருமானக் கூட்டுத்தொகை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாமல் இருந்தது. அந்த நிலைமை அவ்வாறு இருக்கும் போது 10 வருடம் முழுவதும் CIGAS பயன்படுத்தப்பட்டு வருமானங்கள் முகாமைத்துவம் | இந்த ஆண்டு முதல் CIGAS ஊடாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | CIGAS பயன்படுத்தி வருமான முகாமைத்துவம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2010 முதல் 2024 வரையான காலப் பகுதியினுள் பதிவாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,475,265,224 தொகை எனினும், ரூபா 3,988,410,844 தொகை மாத்திரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 1,435,808,941 இற்கான முத்திரை வரி வருமானம் 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையான காலப் பகுதியில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்படாமல், மாகாண சபை நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், மேலும்:, ரூபா 1,051,045,439 இற்கான தொகையொன்று வருமானக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தாமத வேண்டுகோள்கள் தொடர்பாக அமைச்சர் திருப்தியடையின் அந்த நிதியத்தை விடுவிப்பதற்கு அதிகாரசபைக்கு கட்டளையிட முடியும். | சேகரிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் அனுப்புதல் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் மீண்டுவரும் மற்றும் மூலதன தொழில்பாடுகளுக்காக ரூபா 1,858,907,000 இற்கான குறை நிரப்பு ஏற்பாடுகள் வேண்டப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்காக திறைசேரியில் இருந்து ரூபா 3,854,041,834 இற்கான குறைநிரப்பு ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அவ்வாறு கிடைத்திருந்த மொத்த குறைநிரப்பு ஏற்பாடுகளில் 68 சதவீதம் எனப்படும் ரூபா 2,612,070,826 இற்கான தொகையொன்று பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அதேபோல், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திறைசேரிக்கு அனுப்பாமல், ரூபா 1,139,468,561 இற்கான தொகையொன்று மாகாண சபையின் பல்வேறு வங்கிக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | ரூபா 2,612 மில்லியனிற்கான மீதி உரிய முறையில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் படி முறையான திட்டமிடலுடன் பாதீடு தயாரித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2008 இன் 01 இலக்க கிழக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தின் பிரிவு 102A (01) இன் பிரகாரம் வருமான ஊக்குவிப்பு நிதியம் நிறுவப்படாமல் 2018 ஜனவரி 01 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் கிழக்கு மாகாண சபை நிதியக் கணக்கிலிருந்து நிதியம் பெற்றுக்கொண்டு 14 பல்வேறு பதவித் தொகுதிகளுக்குரிய 98 பல்வேறு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 63,883,271 இற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு பிரதான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தும் போது அந்த கருமத்திற்காக வேறு படிகள் செலுத்த முடியாமல் உள்ள போதிலும், அந்த நிலைமையை கவனத்தில் எடுக்காமல், 06 வருடங்களுக்குள் வருமான அலகின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 4,278,050 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஊக்குவிப்பு கொடுப்பனவு நிதியம் நிறுவுவதற்காக கிழக்கு மாகாண ஆளுனரின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளதுடன், அங்கீகாரம் கிடைத்த பின்னர் நிதியம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 17 பதவியணி வெற்றிடங்கள் காணப்படுவதனால் உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து ஒரு வருடத்திற்கு திருப்பி செலுத்தும் கோறிக்கைகள் 200 கோப்புக்களுக்கு மிகையாக காணப்படுவதனால், அவற்றை விரைவாக மேற்கொள்வதற்கு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்துவதற்கு நேரிடுகின்றது. | 2008 இன் 01 இலக்க கிழக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தின் பிரிவு 102A (01) இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 06 வாணிப அலுவல்கள் தொடர்பாக 02 திணைக்களங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 33,347,318 இற்கான வாணிப முற்பணம் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நிலுவையாக காணப்படுவதுடன், அவற்றில் ரூபா 20,836,536 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்ட 03 வாணிப முற்பணத் தொழிற்பாடுகள் 2020 ஆண்டில் மூடப்பட்டிருந்தது. | கிராமிய கைத்தொழில் திணைக்களம் தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட விசேட குழுவின் அறிக்கை மாகாண திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. பரிந்துரை கிடைத்த பின்னர் 2025 ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் செயற்பாட்டுக் கணக்குகளில் அனைத்து மீதிகளும், ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும், திறைச்சேரிக்கு மாற்றப்படுகின்றது. | நிலுவை முற்பண மீதிகள் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 05 வாணிப பண்ணைகள் தொடர்ச்சியாக நட்டத்துடன் இயங்குவதற்கு இடமளித்துள்ளதுடன், அதன் மூலம் மீளாய்வாண்டிற்காக ரூபா 20,022,339 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அந்தப் பண்ணைகள் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் இலாபகரத் தன்மையுடன் செயற்படுத்துவதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | அரச தனியார் கூட்டிணைப்பு ஊடாக எதிர் காலத்தில் இந்தப் பண்ணைகளை செயற்படுத்துவதற்கு திட்டம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பண்ணையின் அலுவல்கள் இலாபகரத் தன்மையுடன் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ஏனைய மாகாண சபைகள் / மத்திய அரசின் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் 03 மாதங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியினுள் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 21,845,015 ஆக காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 19,313,790,133 இற்கான நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியுடன் இணக்கஞ் செய்த போது 34 நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 12,851,428,259 தொகை எனவும், சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் படி ரூபா 10,169,545,518 தொகை எனவும், காட்டப்பட்டுள்ள காரணத்தினால் அந்த சொத்துக்களின் பெறுமதி முறையே ரூபா 6,462,361,874 தொகை மற்றும் ரூபா 9,144,244,615 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லாத சொத்துக்களுக்குரிய ஒவ்வொரு அறிக்கைகளின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற பெறுமதிகளை இணக்கம் செய்து சரி செய்ய வேண்டும். |

### 1.5.4 தலைப்பு – 912 கிராமிய கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 24 திகதி கைத்தொழில் இராஜாங்க அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 3,107,750 இற்கான தொகை கிராமிய கைத்தொழில் பண்ட உற்பத்தியை மேம்படுத்தும் குறிக்கோளுக்காக | மாகாண திரைச்சேரியின் வழிகாட்டலின் படி நிதிப் பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கிடைக்கக்கூடிய நிதியங்கள் முறையான குறிக்கோளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தாமல், 02 வருட காலம் முதல் கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | | பயன்படுத்தப்படாத நிதியங்கள் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சுக்கு அனுப்புதல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2014 ஆண்டின் போது ரூபா 8,500,000 இற்கான மொத்த செலவுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு கிராமிய கைத்தொழில் விடயங்களின் விற்பனை நிலையம் 2023 மே 04 திகதி முதல் மூடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 10 வருட காலப் பகுதியினுள் இந்த நிலையம் நிறுவப்பட்ட குறிக்கோளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 மாத காலப் பகுதியினுள் மீண்டும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக தொடர்ச்சியாக பேணிச் செல்ல வேண்டும். |

**1.5.5 தலைப்பு – 920 பிரதான செயலாளர் அலுவலகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 14 திகதிய 2310/29 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவில் செயல் நடவடிக்கை விதிகளின் பந்தி 32 இற்கு முரணாக 2019 ஜனவரி 01 திகதி முதல், 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் கிழக்கு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்கியிருக்காத கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் 07 சேவைத் தொகுதிகளில் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியக 05 சேவைத் தொகுதிகளில் பதவியணியினர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 5,595,000 இற்கான சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றுலாப் பணியகம் தற்போது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. வீடமைப்பு அதிகாரசபை ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களுக்காக கௌரவ ஆளுனரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் விதியின் பந்தி 32 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஜனவரி முதல் 2024 திசெம்பர் வரையான காலப் பகுதியினுள் 02 மாகாண சபை நியதிச்சட்ட அதிகார சபைகளினால் 08 பதவியணித் தொகுதிகளுக்காக 05 வருடங்கள் | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் ஊழியர் எண்ணிக்கை அங்கீகரிக்கும் வரை உத்தியோகத்தர்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் | பதவியணியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| முதல் அந்தப் பதவியணிகளை அங்கீகரிக்காமல், கிழக்கு மாகாண சபை நிதியத்திலிருந்து கூட்டுத்தொகை ரூபா 20,546,892 தொகை சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வழங்குவதற்கு ஆளுனரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**1.5.6 தலைப்பு – 922 பிரதிப் பிரதான செயலாளர் அலுவலகம் - திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண 03 விசேட அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 318,000,000 தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அந்தச் செயற்திட்டங்களின் கீழ் 40 தொழிற்பாடுகள் 2024 ஜூலை 09 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் 16 தொழிற்பாடுகள் ஆரம்ப மட்டத்திலும், மேலும், 24 தொழிற்பாடுகள் நடைமுறை வேலை நிலைமையிலும் காணப்பட்டது. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளில் 91 சதவீதம் எனப்படும் ரூபா 288,820,000 தொகைக்கான மதிப்பீட்டு தொழிற்பாடுகள் 2025 மார்ச் 28 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தச் செயற்திட்டம் 03 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. ஆரம்ப அலுவல்களுக்காக குறிப்பிட்ட காலம் செலவிடப்பட்டிருந்தது. பின்னர் பருவ மழை ஏற்பட்டிருந்தது. சீரற்ற காலநிலை நிலைமை மற்றும் உரிய தரப்பினர்களிடம் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதில் தாமதம் காரணத்தினால் ஒட்டுமொத்த முன்னேற்றம் பின்னடைந்திருந்தது. | ஒரு வருடத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்திட்டங்களின் எண்ணிக்கை மாத்திரம் திட்டமிடப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.7 தலைப்பு – 923 பிரதிப் பிரதான செயலாளர் அலுவலகம் - நிருவாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபைக்காக 656 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், 2020 ஒக்தோபர் 26 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைத் திணைக்கள சுற்றறிக்கையின் பந்தி 01 இன் படி முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன், சாரதிகள் ஆட்சேர்க்கப்படாமல், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 144 தொகை எனப்படும் 31 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டது. | சாரதிகள் பதவிகளுக்காக ஊக்கமுள்ள தற்போதைய அலுவலக ஊழியர்கள் இடையே நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன், சாரதிகள் பதவியணிக்கு ஆட்சேர்ப்பற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை உரிய முறையில் பயன்படுத்துவதற்காக சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.8 தலைப்பு – 924 பிரதிப் பிரதான செயலாளர் அலுவலகம் - பொறியியல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 செப்தம்பர் 16 திகதிய 11/2022 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கைக்கு முரணாக வாகனங்களின் உரிமையை இரத்துச் செய்யாமல், 2022 மார்ச் 29 திகதி 44 சிதைவடைந்த வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், கடந்த 02 வருட காலப் பகுதியில் தொடர்ந நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்தலை இரத்துச் செய்யுமாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதி ஆணையாளரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஜனவரி 25 திகதிய 04/2022 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கைக்கு முரணாக போதியளவு நடவடிக்கை எடுக்காமல், பல்வேறு திணைக்கள அலுவலகங்களில் அப்புறப்படுத்த வேண்டிய 129 வாகனங்கள் மற்றும் பாவணைக்கு பொருத்தமில்லாத 217 வாகனங்களும் காணப்பட்டது. | உரிய திணைக்களத் தலைவர்கள் / அமைச்சுச் செயலாளர்களினால் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2022 இலக்க சுற்றறிக்கையின் படி ஏலவிற்பனை நடவடிக்கை முறையின் கீழ் தேவையானவைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 36,450,000 இற்கான கலாச்சார மண்டபமொன்று நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2021 இல் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்துடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அதற்காக ரூபா 27,610,000 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர் இறந்துள்ளதால், இவ்வாண்டில் கருமத்தை மீண்டும் வழங்கி கட்டிடத்தின் நிர்மாண வேலைக்கான கருமங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. | எதிர்பார்த்த கால சட்டகத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 21 திகதிய இலக்கம் 02/2017 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 02 மற்றும் 2018 ஒக்தோபர் 10 திகதிய 03/2018 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை முரணாக மாகாண சபைக்கு உரித்தில்லாத மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்ட 26 பொதுவான மற்றும் விசேட கரும வாகனங்கள் மீளாய்வாண்டின் போது உரிமையினை உரித்தாக்கிக்கொள்ளாமல் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வாகன ஏலவிற்பனையின் போது மாகாண சபைக்கு உரித்தில்லாத வாகனங்களுக்காக உரிமையை உரித்தாக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.9 தலைப்பு – 931 விவசாய அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஜனவரி 16 திகதிய நீர்ப்பாசன அமைச்சினால் சூரிய மின்சக்தி நீர்ப்பாசன முறைமையொன்றை செயற்படுத்துவதற்காக கிடைத்திருந்த ரூபா 19,250,000 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டின் போது வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அந்தப் பணம் வைப்புக் கணக்கிலிருந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டங்களுக்கு கிடைத்த நிதியம் அதற்காக செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.10 தலைப்பு – 932 கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு உப்புவேலி கால்நடை உற்பத்திப் பண்ணைக்காக ரூபா 6,760,000 இற்கான செலவில் 40 கிலோவொட் சூரியப் பெனல் செயற்திட்டமொன்று செயற்படுத்தியிருந்ததுடன், அதன் மூலம் வருடாந்தம் பண்ணைக்கான 30000 அலகுகள் மின்சார உற்பத்தி செய்தல் குறிக்கோளாக இருந்த போதிலும், அந்த முறைமையை முறையான பராமரிப்பொன்று காணப்படாமையால் முறைமையின் மூலம் மின்சக்தி உருவாக்கப்படாமையால் 2023 ஆகஸ்ட் மாதம் முதல் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | குறிப்பிட்ட கம்பனி தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. கம்பனிக்குரிய தனிப்பிட்ட முகவரியொன்று கிடைத்திருப்பதுடன், அதனூடாக கம்பனியுடன் தொடர்புகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 1.5.11 தலைப்பு – 933 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 முதல் 2024 ஆண்டு வரையான காலப் பகுதியில் உணவு ஆணையாளரிடம் கிடைத்த நிதியத்தின் மூலம் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 32 அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களுக்கு அரிசி ஆலை | உணவு ஆணையாளரிடம் அறிவுரை வேண்டப்பட்ட போதிலும், கிடைத்திருக்கவில்லை. பொலிஸ் நிலையத்துடன் தொடர்பில்லாத உடன்படிக்கைசார் சிக்கலொன்றாக காணப்பட்டமையால் கடன் அறவீடு செய்யும் கட்டளைச் சட்டம் அல்லது பொது ஆதனச் | உடன்படிக்கையின் படி வழங்கியிருந்த முற்பணத் தொகை உரிய முறையில் அறவீடு செய்வதற்கும் நிலுவையாக காணப்படும் |

| | | |
|---|---|---|
| உரிமையாளர்களை மேம்படுத்தும் குறிக்கோளுடன், நெற் கொள்வனவு செய்யும் முற்பணம் ரூபா 129,700,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்தப் பணம் அரிசி விற்பனை முலம் கிடைக்கக்கூடிய வருமானத்தில் 06 மாதங்களில் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. 2021 திசெம்பர் 15 திகதி கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் படி அம்பாறை மாவட்டத்தில் பணத்தை திருப்பிச் செலுத்தலை புறக்கணிக்கும் 10 உற்பத்தியாளர்களுக்காக 2024 மார்ச் 07 திகதி செலுத்தப்பட்ட ரூபா 16,000,000 இற்கான தொகை உட்பட ரூபா 101,640,000 இற்கான தொகையொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், 2025 ஏப்ரல் 30 திகதி அளவில் 10 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலம் நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் படி பரிந்துரைக்கப்பட்டது. கிழக்கு மாகாண சட்ட அலகின் மூலம் முறையான நடவடிக்கை எடுக்கும் படி வேண்டப்பட்டது. முறைப் பிரகாரம் கோறிக்கையொன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. | பணத்தினை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.12 தலைப்பு – 934 மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாய அலுவல்களை மேம்படுத்துவதற்காக 2011 ஆண்டின் போது ரூபா 19,628,116 தொகை பெறுமதியான கொபல்கோ அகழ்வு இயந்திரமொன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், அதனை எதிர்பார்த்த குறிக்கோளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், இயந்திர இயக்குனர் ஒருவர் காணப்படாமையால் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் மட்டக்களப்பு பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலக இடமொன்று துருப்பிடிக்கக்கூடியவாறு வைக்கப்பட்டிருந்தது. | தற்போது அம்பாறை மாவட்டத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக அகழ்வு இயந்திரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்த இயந்திர உபகரணங்கள் குறைபயன்பாடு அடைவதற்கு இடமளிக்காமல் தொடர்ச்சியாக பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.13 தலைப்பு – 940 கல்வி அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05/2016 இலக்கம் கொண்ட மற்றும் 2016 மார்ச் 09 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவுகள் (ii) மற்றும் (iii) இற்கு முரணாக மட்டக்களப்பு வலையக் கல்விப் பணிப்பாளருக்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2023 நவம்பர் 08 திகதி முதல் 2024 நவம்பர் 28 திகத வரையான காலப் பகுதியில் அவர் மாகாண கல்விப் பணிப்பாளர் பதவியில் கடமை அணவல் செய்த காரணத்தினால் ரூபா 3,084,881 தொகைக்கான மேலதிக எரிபொருள் செலவொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. | கிழக்கு மாகாண பிரதான செயலாளரின் EP/01/C/VH/008 இலக்கம் கொண்ட மற்றும் 2023.12.15 திகதிய கடிதத்தின் படி வாகனம் பயன்படுத்தப்பட்டது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஊழியர் கடன் மீதி ரூபா 350,726,306 தொகையாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊழியர் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 353,529,293 தொகையாக காணப்பட்டமையால், 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல், ரூபா 2,802,987 இற்கான இணக்கஞ் செய்யப்பட்டாத வித்தியாசம் ஒன்று அந்த 02 கூற்றுக்கும் இடையே காணப்பட்டது. | ரூபா 263,000 இற்கான வித்தியாசம் - சம்பளம் கழித்தலை அறவிட முடியாக் கடன் என கணித்தமையால் ரூபா 12,100 தொகை அகற்றுவதற்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது.<br>ரூபா 3,078,097 தொகை – சம்பாந்துறை கல்வி அலுவலகத்திற்குரிய ஆவணங்கள் காணப்படாமையால் பதிவழிப்பதற்காக அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. (2017 முதல்) | வித்தியாசத்திற்கான காரணங்களை பரிசோதனை செய்து விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 முதல் 2024 வரையான கால வீச்சினுள் கிழக்கு மகாண கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பல்வேறு ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் அவற்றின் சட்ட அலுவல்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 681,250 தொகை மற்றும் ரூபா 1,402,375 தொகைக்கான படிகளின் கூட்டுத்தொகை என ரூபா 2,083,625 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த ஒழுக்காற்று விசாரணைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்ட அலுவல்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ரூபா 681,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இறுதி நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணை அறிக்கைகள் பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2019 இன் படி ஒழுக்காற்று விசாரணைகள் குறிப்பிட்ட காலத் திட்டத்திமொன்றின் படி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**1.5.14 தலைப்பு – 950 சுகாதார அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலவதியாவதற்கு அண்மித்திருந்த மருந்து வகைகளை இனங்கண்டு அந்த மருந்துகளை தேவையான வைத்தியசாலைகளுக்கு விரைவாக வினியோகிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படாமையால், மீராவோடை பிராந்திய வைத்தியசாலையின் ரூபா 2,613,772 தொகை பெறுமதியான 79 வகையான மருந்துகள் காலவதியாகியமையால் தடை செய்யப்பட்டிருந்தது. | மீராவோடை பிராந்திய வைத்தியசாலையின் மருந்தாளர் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப விசாரணைகளின் மூலம் கண்டறிந்தவைகளின் மீது முழுமையான விசாரணைக்கான ஆவணங்களுடன் வரைவுக் குற்றப் பத்திரம், ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக திருகோணமலை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. | குறிப்பிட்ட மருந்துகள் காலவதியாவதற்கு முன்னர் உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுவூட்டும் செயற்திட்டம் (PHSSP) வினியோகம் தொடர்பான சுட்டிகள் (DLI-3) குறிக்கோள்களுக்கு முரணாக, 04 பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்களில் 10 பல்வேறு அலுவலகக் கட்டிடங்களை மறுசீரமைத்தல், அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிருவாக அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற உத்தியோகபூர்வ வாகனங்களின் திருத்த வேலைகள் ஆகியவற்றிற்காக ரூபா 197,970,611 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | 12 ஒப்பந்த வேலை அலுவல்களுக்காக ரூபா 83,388,510 இற்கான வேலைகளுக்காக பதிலளிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் குறிக்கோளின் படி செலவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.15 தலைப்பு – 961 வீதி அபிவிருத்தித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருகோணமலை மற்றும் கல்முனை பிரதேச வீதி அபிவிருத்தி அலுவலகங்களின் மூலம் பல்வேறு நிறுவனங்களுக்காக பணம் அறவீடு செய்யப்படாமல் இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 1,089,896 இற்கான வாடகைத் தொகையொன்று மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | ரூபா 1,089,896 இற்கான நிலுவை வாடகை மீதியில் ரூபா 349,256 தொகை அறவீடு செய்யப்பட்டது. மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட அலகு ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகைத் தொகை ரூபா 740,638 தொகை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை வாடகைத் தொகை 01 வருடம் முதல் 13 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டது. | | |
| (ஆ) | வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் 04 பிராந்திய அலுவலங்களில் ரூபா 80,229,980 தொகை பெறுமதியான 22 வகையான பாதை வேலைகளுக்கான இயந்திரங்கள் 15 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலை மேற்கொள்ள முடியாத இயந்திர உபகரணங்களை இந்த ஆண்டின் ஏலவிற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்படுகின்ற இயந்திர உபகரணங்கள் குறைபயன்பாடு ஏற்பட நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.16 வீடமைப்பு அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பதவியணி ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 10 வருட காலம் முதல் நிரந்தர / அமைய / ஒப்பந்த அடிப்படையில் 26 உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் மற்றும் மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு ரூபா 11,280,000 தொகை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | ஆளணியை அங்கீகரித்துக்கொள்வதற்காக ஆளணி மீளாய்வு ஆணைக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நியமனங்கள் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும். |